بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *19/06/2026* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடைத்தன்மை மற்றும் தாராள குணத்தின் ஒளியில் நபி (ஸல்) அவர்களின் நற்பண்புகள் பற்றிய உள்ளங்கவர் குறிப்பு**

أَشۡهَدُ أَنۡ لَّاۤ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾

إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ۬ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடைத்தன்மை மற்றும் தாராள குணம் குறித்த சில அறிவிப்புகளை நான் சமர்ப்பிக்கிறேன். ஒரு அறிவிப்பில் வந்துள்ளது, ஹஸ்ரத் அபூஸயீத் குத்ரீ (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அன்ஸாரிகளில் சிலர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் (உதவி) கேட்டார்கள். அன்னார் அவர்களுக்கு கொடுத்தார்கள். மீண்டும் அவர்கள் கேட்டார்கள். அப்போதும் அன்னார் கொடுத்தார்கள். அவர்கள் மீண்டும் கேட்டபோது அப்போதும் கொடுத்தார்கள். எதுவரை என்றால், நபி (ஸல்) அவர்களிடம் இருந்த அனைத்தும் தீர்ந்து போய்விட்டன

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "என்னிடம் எந்த செல்வம் இருந்தாலும், அதை நான் உங்களிடமிருந்து மறைத்து வைக்க மாட்டேன். யார் யாசிப்பதிலிருந்து தவிர்ந்திருக்கிறாரோ அவரை அல்லாஹ் தஆலாவும் பாதுகாக்கிறான். யார் உலக செல்வங்களில் இருந்து தேவையற்றவராக இருக்க நாடுகிறாரோ அல்லாஹ்வும் அவரை தேவையற்றவராக ஆக்கிவிடுகிறான். மேலும், யார் தனது ஆன்மாவின் மீது சுமையை சுமத்தி பொறுமையைக் கடைப்பிடிக்கிறாரோ அவருக்கு அல்லாஹ்வும் பொறுமையை வழங்குகிறான். பொறுமையை விடச் சிறந்த, விசாலமானதொரு அருட்கொடை எவருக்கும் வழங்கப்படவில்லை."

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் கூறுகிறார்கள்: நாங்கள் ஒரு பயணத்தில் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தோம். நான் ஒரு அடங்காத ஒட்டகத்தின் மீது அமர்ந்திருந்தேன். அது மற்ற வாகனங்களை விட முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதைத் தடுத்து அதட்டினார்கள். இதைப் பார்த்த அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "இந்த ஒட்டகத்தை எனக்கு விலைக்குக் கொடுத்து விடுங்கள்" என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், "இது தங்களுடையதுதான்" என்று கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்)

அவர்கள், "இதை எனக்கு விற்றுவிடுங்கள்" என்று கூறினார்கள். எனவே, அவர்கள் அந்த ஒட்டகத்தை நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு விற்று விட்டார்கள். பிறகு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அப்துல்லாஹ் பின் உமரே! இப்போது இந்த ஒட்டகம் உங்களுடையது; இப்பொழுது இதை நீங்கள் நினைத்தபடி செய்து கொள்ளுங்கள்.

*ஹுஸைர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* பரிசு வழங்குவதற்கும் வழிமுறை உண்டு... மேலும், விலங்காக இருப்பதனால் மற்ற வாகனங்களை விட அது முன்னேறிச் சென்றால் பரவாயில்லை என்றும், தற்போது இந்த ஒட்டகத்தை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வாங்கிவிட்டதால், அது மற்ற வாகனங்களை விட முன்னேறிச் சென்றாலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் ஒட்டகமே முன்னால் செல்கிறது என்றுதான் கூறப்படும் என்றும் அவர்கள் விளக்கினார்கள்.

ஒரு போரின் போது ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களின் ஒட்டகம் சோர்வடைந்து, மெதுவாக நடக்கத் தொடங்கியதால், அவர்கள் படையை விட்டு பின்தங்கிவிட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவர்களிடம் வந்து நலம் விசாரித்தார்கள். ஜாபிர் (ரலி) அவர்கள் ஒட்டகத்தின் சோர்வைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நபி (ஸல்) அவர்கள் தமது தொரட்டியால் (கொக்கி போன்ற ஒரு கருவியால்) ஒட்டகத்தை இழுத்து, "இப்போது இதன் மீது ஏறி அமருங்கள்" என்று கூறினார்கள். ஜாபிர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: "நான் அதன் மீது ஏறி அமர்ந்தேன். அது எவ்வளவு வேகமாகச் சென்றது என்றால், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் வாகனத்தை விடவும் அது முந்திச் செல்லத் தொடங்கியது. அதனால் நான் அதை நிறுத்த வேண்டியிருந்தது."

பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னிடம், " நீங்கள் திருமணம் செய்து கொண்டீர்களா?" என்று கேட்டார்கள். நான், "ஆம்" என்று கூறினேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “நீங்கள் உங்கள் வீட்டிற்குச் செல்லவிருக்கிறீர்கள், அங்கு சென்றடையும் போது புத்திசாலித்தனமாகவும் எச்சரிக்கையுடனும் நடந்து கொள்ளுங்கள்; குடும்பத்தினருடன் நன்முறையில் நடந்து கொள்ள வேண்டும்” என்று கூறினார்கள். பிறகு நபி (ஸல்) அவர்கள், "உம்முடைய ஒட்டகத்தை எனக்கு விற்கிறீரா?" என்று கேட்டார்கள். நான், "ஆம்" என்று கூறினேன். அன்னார் அதை ஒரு ஊக்கியா வெள்ளிக்கு வாங்கிக் கொண்டார்கள்.

பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனக்கு முன் மதீனாவைச் சென்றடைந்தார்கள். நான் அடுத்த நாள் காலையில் அங்கு சேர்ந்தேன். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "உமது ஒட்டகத்தை விட்டுவிட்டு, மஸ்ஜிதுக்கு சென்று இரண்டு ரக்அத்கள் தொழுங்கள்" என்று கூறினார்கள். அவ்வாறே நான் உள்ளே சென்று தொழுதேன். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம், “அவருக்கு

ஒரு ஊக்கியா வெள்ளியை நிறுத்துக் கொடுங்கள்” என்று கூறினார்கள். ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் தராசைச் சற்று சாய்த்தே, அதாவது, சற்று கூடுதலாகவே நிறுத்துக் கொடுத்தார்கள். பிறகு நான் திரும்பி நடக்கத் தொடங்கினேன்.

அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "ஜாபிரை மீண்டும் என்னிடம் அழைத்து வாருங்கள்" என்று கூறினார்கள். அவர்கள், "உமது ஒட்டகத்தை எடுத்துக் கொள்ளுங்கள், அதன் விலையும் உமக்கே சொந்தம்" என்று கூறினார்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கிய இந்தப் பரிசில் எவ்வளவு பரக்கத் இருந்தது என்றால், அந்த ஒட்டகம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலம் வரை உயிரோடு இருந்தது என்று அவர் கூறுகிறார்.

அன்னாருடைய முன்மாதிரி அன்னாருடைய தர்பிய்யத் மற்றும் அன்னாருடைய தூய ஆற்றலின் தாக்கம் அனைத்து தோழர்கள் மீதும் இருந்தது. ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் மீதும் இந்தத் தாக்கம் இருந்தது. இதன் காரணமாகவே அவர்கள் எந்தவொரு நெருக்கடி பற்றிய தயக்கமும் இன்றி, தம் செல்வங்கள் அனைத்தையும் அன்னாரிடம் ஒப்படைத்தார்கள். இது தொடர்பாக கூறப்படுகிறது, ஒருமுறை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் கதீஜாவிடம் வந்தபோது, சற்றே கவலையுடன் காணப்பட்டார்கள். ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் அன்னாரிடம், "என்ன ஆயிற்று?" என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், "பஞ்ச காலமாக இருப்பதால் எனக்கு உங்களிடம் கேட்க வெட்கமாக இருக்கிறது; நான் செல்வத்தைச் செலவழித்தால் உங்கள் செல்வம் தீர்ந்துவிடும், ஒருவேளை நான் அதைச் செலவழிக்காமல் இருந்தால் அல்லாஹ்வுக்கு அஞ்சுகிறேன்" என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் விவரிப்பதாவது, ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் தீனார்களை எடுத்து வந்து, அவற்றைக் குவியலாகக் கூட்டினார்கள். செல்வத்தின் மிகுதியால் எனக்கு முன்னால் யார் அமர்ந்திருக்கிறார்கள் என்பது கூட எனக்குத் தெரியவில்லை. பிறகு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், "நீங்கள் சாட்சியாக இருங்கள்! இந்தச் செல்வம் முழுவதும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்குரியது. அவர்கள் விரும்பினால் இதைச் செலவழிக்கலாம்; விரும்பினால் இதனை தம்மிடம் வைத்துக் கொள்ளலாம்" என்று கூறினார்கள். அவர்கள் கொடுத்து விட்டார்கள். இவ்வாறு, அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கவலையைப் போக்க, ‘சரி நீங்கள் செலவிடுங்கள்’ என்று கூறினார்கள்.

ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, ஏதேனும் தருமாறு கேட்டார். நபி (ஸல்) அவர்கள், “இப்போது என்னிடம் தருவதற்கு எதுவும் இல்லை. நீ எனது பெயரில் பொருட்களை வாங்கிக் கொள். என்னிடம் பணம் வருகிற போது நான் அதற்கான விலையைச் செலுத்தி விடுகிறேன்” என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், “அல்லாஹ்வின் தூதரே!

முன்பே தாங்கள் இவருக்கு கொடுத்துவிட்டீர்கள். தங்கள் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயத்தில் அல்லாஹ் தஆலா தங்களைப் பொறுப்பாளியாக ஆக்கவில்லை” என்று கூறினார்கள். உமர் (ரலி) அவர்களின் இந்த வார்த்தையை நபி (ஸல்) அவர்கள் விரும்பவில்லை. அப்போது அன்சாரிகளில் ஒருவர், “அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் தாராளமாகச் செலவிடுங்கள், அரியணையின் அதிபதியின் தரப்பிலிருந்து வறுமை வந்துவிடுமோ என்று அஞ்சாதீர்கள்!” என்று கூறினார். அந்த அன்சாரியின் இந்த வார்த்தையைக் கேட்டு நபி (ஸல்) அவர்கள் புன்னகைத்தார்கள். மேலும் அவர்களின் முகத்தில் மகிழ்ச்சி தெரிந்தது. பிறகு நபி (ஸல்) அவர்கள், “எனக்கு இவ்வாறுதான் கட்டளையிடப்பட்டுள்ளது” என்று கூறினார்கள்.

ஒரு தோழர் நபி (ஸல்) அவர்களுக்குப் பேரீச்சம்பழங்களையும் வெள்ளரிக்காய்களையும் சமர்ப்பித்தார். அதே நேரத்தில், பஹ்ரைனில் இருந்து நபி (ஸல்) அவர்களிடம் தங்க நகைகள் வந்திருந்தன. நபி (ஸல்) அவர்கள் ஒரு கைப்பிடி அளவு நகைகளை எடுத்து, அந்தப் பேரீச்சம்பழங்கள் மற்றும் வெள்ளரிக்காய்களுக்குப் பகரமாக அவருக்குக் கொடுத்துவிட்டார்கள்.

கடனாளியாக இருக்கும் ஒரு நபர் இறந்துவிட்டால், அவர் கடனை அடைப்பதற்கான சொத்து எதையும் விட்டவைக்கவில்லை என்றால், நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களிடம், “உங்கள் சகோதரரின் ஜனாஸா தொழுகையை நீங்களே தொழுது கொள்ளுங்கள்” என்று கூறுவார்கள். மேலும் அன்னார், “முஸ்லிம்களுக்கு அவர்களின் சொந்த உறவினர்களை விட நானே மிக நெருக்கமானவன்” என்றும் கூறுவார்கள். எனவே, நம்பிக்கையாளர்களில் யாராவது இறந்து, அவர் கடனை விட்டுச் சென்றால், அதை அடைப்பது எனது பொறுப்பாகும்; மேலும் அவர் ஏதேனும் சொத்தை விட்டுச் சென்றால், அது அவருடைய வாரிசுகளுக்குரியதாகும்” என்று கூறினார்கள்.

*ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் ஒரு விரிவான அறிவிப்பை மேற்கோள் காட்டி, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் கடனை அடைப்பது பற்றி ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் விவரித்துள்ளார்கள்:* அதில் அல்லாஹ் மிக அசாத்தியமான முறையில் தனது தரப்பிலிருந்து கடனை அடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தான். கடன் அனைத்தும் அடைக்கப்பட்ட பிறகு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “பிலாலே! கடன் அடைக்கப்பட்ட பிறகு மீதமுள்ள சொத்துக்களை ஏழைகளுக்குச் செலவழித்து விடு” என்று கூறினார்கள். அன்று இரவு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பள்ளிவாசலிலேயே தங்கினார்கள். தங்களது இல்லத்திற்குச் செல்லவில்லை. அடுத்த நாள் விசாரித்த போது, மீதமிருந்த சொத்துக்கள் அனைத்தும் செலவழிக்கப்பட்டுவிட்டன என்று பிலால் (ரலி) அவர்கள் கூறினார்கள். இதைக் கேட்ட நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் பெருமையையும் புகழையும் பாடிவிட்டு, அதன் பிறகு தம் மனைவியரிடம் சென்றார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்களிடம், அவருடைய குதிரை எவ்வளவு தூரம் ஓட முடியுமோ, அவ்வளவு தூரத்திற்கு அவருக்கு நிலத்தை வழங்க கட்டளையிட்டார்கள். குதிரை ஓடி ஓடி ஒரு இடத்தில் நின்றது. பிறகு ஸுபைர் (ரலி) அவர்கள் தமது சாட்டையை வீசினார்கள். அது தூரத்தில் விழுந்தது. அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், “அந்த சாட்டை விழுந்த இடம் வரை உள்ள நிலத்தை அவருக்குக் கொடுத்துவிடுங்கள்” என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம் இல்லத்திற்கு வந்து, “நம் வீட்டில் என்ன இருக்கிறது?” என்று கேட்டார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், இரண்டு அஷ்ரஃபிக்களை எடுத்து “இவைதான் உள்ளன” என்றார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “அந்த அஷ்ரஃபீகளைத் தமது உள்ளங்கையில் வைத்துக் கொண்டு, “தனக்குப் பின்னால் இரண்டு அஷ்ரஃபிக்களை விட்டுச் செல்லும் ஒரு நபியின் நிலை என்னவாகும்?” என்று கூறிவிட்டு, அந்த நிமிடமே அந்த அஷ்ரஃபிக்களை பகிர்ந்து கொடுத்துவிட்டார்கள்.

ஹுனைன் போரில் ஆறாயிரம் அல்லது எட்டாயிரம் பெண் மற்றும் ஆண் அடிமைகளும், இருபத்தி நான்காயிரம் ஒட்டகங்களும், நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட ஆடு மாடுகளும், மற்றும் நான்காயிரம் ஊகியா (490 கிலோகிராம்) வெள்ளியும் போர்ச் செல்வங்களாக கிடைத்தன. நபி (ஸல்) அவர்கள் (முதலில்) உள்ளங்களைக் கவருவதற்காக இந்த போர்ச் செல்வங்களை பங்கீடு செய்யத் தொடங்கினார்கள். இவர்கள் அரேபியாவின் பெரும் தலைவர்களாகவும், தத்தமது கோத்திரங்களில் கண்ணியமும் பெருமையும் மிக்கவர்களாகவும் இருந்தனர். அவர்களை நெருக்கமாக்கிக் கொள்வதற்காக அன்னார் இந்தச் செல்வங்களை அவர்களுக்கு வழங்கினார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ரஸூல் (ஸல்) அவர்கள் அபூ சுஃப்யானுக்கும் அவருடைய மகன்களுக்கும் எவ்வளவு அதிகமான செல்வத்தை வழங்கினார்கள் என்றால், அதைப்பார்த்து அபூ சுஃப்யான் உணர்ச்சிவசப்பட்டு, “அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் மாபெரும் கொடையாளி! என் தாயும் தந்தையும் உங்களுக்கு அர்ப்பணமாகட்டும்! நான் தங்களுடன் போர் புரிந்திருக்கிறேன். தாங்கள் எவ்வளவு சிறந்த போர் வீரர்! மேலும் நான் தங்களுடன் சமாதானம் செய்திருக்கிறேன். தாங்கள் எவ்வளவு சிறந்த முறையில் சமாதானம் செய்துகொள்பவராக இருக்கிறீர்கள்!” என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு சந்தர்ப்பத்தில் அன்னாரிடம் ஏராளமான ஆடு மாடுகள் இருந்தன. ஒரு காஃபிர் அன்னாரிடம், இவ்வளவு ஆடு மாடுகள் சேர்ந்திருப்பதைப் பார்த்து, இது

போன்ற செல்வம் ரோம மற்றும் பாரசீக மன்னர்களிடம் கூட இருக்காது என்று கூறினார். அன்னார் உடனடியாக அவை அனைத்தையும் அவருக்கே வழங்கிவிட்டார்கள். அவர், “ஒரு நபியைத் தவிர வேறு எவராலும் இத்தகைய மாபெரும் வள்ளல் குணத்தை வெளிப்படுத்த முடியாது” என்று கூறி, அதே கணமே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்.

ஹுனைன் போரின் போது, ஒரு பெண்மணி அன்னாரிடம் வந்து சில கவிதைகளைப் படித்தாள். அதில் அன்னாரது பால்குடிப் பருவத்தில் (பனூ ஹவாஸின் கோத்திரத்தில்) அன்னார் கழித்த நாட்களைப் பற்றிய குறிப்பு இருந்தது. இந்தக் கவிதைகளைக் கேட்டவுடன், அன்னார் பனூ ஹவாஸினின் அனைத்துச் செல்வங்களையும் அவர்களிடமே திருப்பி ஒப்படைத்தார்கள். அத்தோடு மட்டுமில்லாமல், அவர்களுக்கு மேலும் ஐந்து லட்சம் திர்ஹம் மதிப்புள்ள கூடுதல் செல்வங்களையும் வழங்கினார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உன்னதமான நற்பண்புகளைப் பற்றிக் குறிப்பிடும் போது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: அவர்களிடம் மிக உயர்ந்த அளவிலான நடுத்தர நிலை காணப்பட்டது. அவர்களின் ஒவ்வொரு நற்பண்பும் அதற்குரிய சரியான இடத்திலும் சூழலிலும் வெளிப்பட்டது. அன்னாரின் உன்னதமான குணங்களில், அன்னாரின் கொடைத்தன்மையும் தகுந்த இடத்தில்தான் இருந்தது; அன்னாரின் தியாகமும் தகுந்த இடத்தில்தான் இருந்தது; அன்னாரின் கருணையும் தகுந்த இடத்தில்தான் இருந்தது.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* நபி (ஸல்) அவர்களின் போதனைகள் எவ்வளவு சமநிலையானவையாக இருக்கின்றனவோ, அதே போன்று அன்னாரின் ஒவ்வொரு செயலும் அந்தப் போதனைகளுக்கு ஏற்ப முற்றிலும் சமநிலையானதாகவே இருந்தது. அல்லாஹ் தஆலா, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் சிந்தித்து, அதன்படி செயல்பட நம் அனைவருக்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக. {ஆமீன்}

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن

يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِیَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ

يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ

يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)